# April 18, 2026 – தினமணி செய்தித்தாள் – சிறு துணுக்கள்

1. மக்களவை – பேரவைகளில் 33 சதவீத மகளிர் இடஒ துக்கீட்டை விரைந்து அமலாக்குவதுடன், மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகபட்சம் 850 வரை அதிகரிக்க வகை செய்யும் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் தோல்வியடைந்தது.

(i) ஓர் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா நிறைவேற மொத்த உறுப்பினர்களின் (543) எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளும், வாக்கெடுப்பில் பங்கேற்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மைக்கான வாக்குகளும் தேவை.

(ii) மேற்கண்ட மசோதா மீதான வாக்கெடுப்பில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மைக்கான வாக்குகள் கிடைக்கவில்லை. வாக்கெடுப்பில் 528 உறுப்பினர்கள் பங்கேற்ற நிலையில், "மசோதாவுக்கு ஆதரவாக 298 வாக்குகளும், எதிராக 230 வாக்குகளும் கிடைத்தன; மூன்றில் இரு பங்கு பெரும்பான்மைக்கு 352 வாக்குகள் தேவை என்ற நிலையில், 54 வாக்குகள் வித்தியாசத்தில் மசோதா தோல்வியடைந்தது.

(iii) நாடு முழுவதும் கடந்த சில நாள்களாக இந்த மசோதா விவகாரமே பேசுபொருளாக இருந்தது. குறிப்பாக, தென் மாநிலங்களின் பிரதிநி தித்துவம் குறையக் கூடும் என்ற கவலைகளும், மகளிர் இடஒதுக்கீட்டின் பின்னணியில் தொகுதி மறுசீரமைப்பை முன்னெடுப்பதாக மத்திய அரசு மீது விமர்சனங்களும் முன்வைக்கப்பட்ட அதேநேரம், தொகுதி மறுசீரமைப்பு செயல்முறையில் எந்த மாநிலத்துக்கும் பாகுபாடு காட்டப்படாது; எந்த மாநிலமும் இழப்பைச் சந்திக்காது என்று பிரதமர் மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் எனினும், விளக்கமளித்தனர். மசோதா தோற்கடிக்கப்பட்டுவிட்டதால், எதிர்க்கட்சிகளுக்கு எதிராக இந்த விவகாரத்தை ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி கையிலெடுத்துள்ளது.

(iv) மத்திய அரசின் திடீர் முடிவு:

- மக்களவை, பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் கடந்த 2023-இல் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி, 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்த பிறகே மகளிர் இடஒதுக்கீட்டை அமலாக்க முடியும் என்பதால், 2034-க்கு முன் நடைமுறைப்படுத்த முடியாத நிலை நிலவுகிறது.
- இந்தச் சூழலில், மகளிர் இடஒ துக்கீட்டை விரைந்து செயல்படுத்த மத்திய அரசு திடீரென முடிவு மேற்கொண்டது. இது தொடர்பான மூன்று மசோதாக்களைக் கொண்டுவந்து நிறைவேற்றும் நோக்கில், நாடாளுமன்ற மூன்று நாள் சிறப்பு அமர்வு கடந்த வியாழக்கிழமை (ஏப்.16) தொடங்கியது.

(v) மசோதாக்கள் என்னென்ன?:

- மகளிர் இடஒதுக்கீட்டை 2029 முதல் அமலாக்குவதுடன், அதற்கு ஏதுவாக மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543-இல் இருந்து அதிகபட்சமாக 850

வரை அதிகரிக்க வகை செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 131-ஆவது - திருத்த மசோதா-2026, தொகுதி மறுசீரமைப்பு மசோதா-2026 (தொகுதி மறுசீரமைப்பு ஆணையம் அமைக்கும் மசோதா), சட்டப் பேரவையுடன் கூடிய யூனியன் பிரதேசங்களில் இந்தச் சட்டத் திருத்தங்களை அமலாக்க வகை செய்யும் யூனியன் பிரதேசங்கள் சட்டத் திருத்த மசோதா-2026 ஆகிய மூன்று மசோதாக்களும் எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையே அறிமுகப்படுத்தப்பட்டு, விரிவான விவாதம் தொடங்கியது.

(vi) மசோதா தோல்வி:

- வெள்ளிக்கிழமை மாலை வரை நீடித்த கடும் விவாதத்துக்குப்பின் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், மகளிர் இடஒதுக் கீடு அமலாக்கம்-தொகுதி மறு சீரமைப்புக்கான அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா தோல்வியடைந்தது. முக்கிய மசோதா தோற்கடிக்கப்பட்டுவிட்டதால், பிற இரு மசோதாக்களையும் மத்திய அரசு தொடர்ந்து முன்னெடுக்கவில்லை. மக்களவை அலுவல்கள் சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டன.

2. அனைத்து வகையான வணிகக் கப்பல்களும் பயணிக்க ஏதுவாக ஹோர்முஸ் நீரிணையை முழுவதுமாகத் திறப்பதாக ஈரான் அறிவித்தது.

(i) முன்னதாக, இஸ்ரேல்-லெபனான் இடையே 10 நாள்கள் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

3. கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த 2025-26 நிதியாண்டில், இந்தியாவின் தங்கம் இறக்குமதி 24 சதவீதம் அதிகரித்து, 7,198 கோடி டால ராக (சுமார் ரூ.6.65 லட்சம் கோடி) புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

(i) முந்தைய 2024-25-ஆம் நிதியாண்டில் தங்கம் இறக்குமதி 5,800 கோடி டாலராக இருந்தது குறிப்பிடத்தக்கது. அதேநேரம். தங்கம் இறக்குமதியின் அளவு முந்தைய ஆண்டை காட்டிலும் 4.76 சதவீதம் சரிவடைந்துள்ளது. முந்தைய நிதியாண்டில் 757.09 டன்னாக இருந்த இறக்குமதி, தற்போதைய கணக்கீட்டின்படி 721.03 டன்னாகக் குறைந்துள்ளது.

(ii) கடந்த நிதியாண்டில் ஒரு கிலோ தங்கத்தின் சராசரி விலை சுமார் 76,617 டாலரிலிருந்து 99,825 டாலராக உயர்ந்தது. இவ்வாறு சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை வரலாறு காணாத அளவில் அதிகரித்ததே இந்த மதிப்புக் கூடுதலுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

(iii) வெள்ளி இறக்குமதி...:

- கடந்த நிதியாண்டில் வெள்ளி இறக்குமதி சுமார் 150 சதவீதம் அதிகரித்து, 1,200 கோடி டாலரை எட்டியுள்ளது. அளவீட்டு ரீதியாக 7,334.96 டன் வெள்ளி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 42 சதவீதம் அதிகமாகும்.

(iv) ஸ்விட்சர்லாந்திலிருந்து....:

- ஐரோப்பிய நாடான ஸ்விட்சர் லாந்திலிருந்துதான் இந்தியா அதிகப்படியாக 40 சதவீத

தங்கத்தை இறக்குமதி செய்கிறது. கடந்த நிதியாண்டில் நிதியாண்டில் ஸ்விட்சர்லாந்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த இறக்குமதி 11.36 சதவீதம் உயர்ந்து 2,427 கோடி டாலராக அதிகரித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக ஐக்கிய அரபு அமீரகம் (16 சதவீதம்), தென்னாப்பிரிக்கா (10 சதவீதம்) ஆகிய நாடுகள் உள்ளன.

(v) பொருளாதாரப் பாதிப்பு:

- தங்கம் மற்றும் வெள்ளியின் இந்த அதீத இறக்குமதி உயர்வால் நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை (ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கும் இடையிலான வித்தியாசம்) 33,320 கோடி டாலராக அதிகரித்துள்ளது. இது நாட்டின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என அஞ்சப்படுகிறது.
- நகைத் தொழில்துறையின் தேவையே இந்த இறக்குமதிக்கு முதன்மைக் காரணமாக இருந்தாலும், நாட்டின் பொருளாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு தங்கம் மற்றும் வெள்ளிப் பொருள்கள் இறக்குமதிக்கு மத்திய அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருவது குறிப்பிடத்தக்கது.

4. மியான்மரின் முன்னாள் அரசு ஆலோசகர் ஆங் சான் சூகிக்கு (80) விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை அந்நாட்டு அரசு குறைத்துள்ளது.

(i) மியான்மர் புத்தாண்டை முன்னிட்டு 4,335 கைதிகளுக்கு அறிவிக்கப்பட்ட பொது மன்னிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஆங் சான் சூகியின் நெருங்கிய கூட்டாளியான அந்நாட்டின் முன்னாள் அதிபர் வின் மியின்ட் விடுவிக்கப்பட்டுள்ளார்.

(ii) கடந்த 2021-இல் ஆங் சான் சூகி (80) தலைமையிலான மக்களாட்சியை கவிழ்த்துவிட்டு, மின் ஆங் லயிங் தலைமையிலான ராணுவத்தினர் ஆட்சியைக் கைப்பற்றினர். அப்போது ஆங் சான் சூகி, அதிபர் வின் மியின்ட் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் சிறைபிடிக்கப்பட்டனர்.

(iii) ஊழல், தேர்தல் முறைகேடு எனப் பல குற்றச்சாட்டுகளின் கீழ் ஆங் சான் சூகிக்கு விதிக்கப்பட்டிருந்த 27 ஆண்டுகள் சிறைத்தண்டனையில் தற்போது 4.5 ஆண்டுகள் குறைக்கப்பட்டுள்ளது.

5. உலகின் முன்னணி ஓடிடி தளமான நெட்ஃபிளிக்ஸ் நிறுவனத்தின் இணை நிறுவனரும், தற்போதைய தலைவருமான ரீட் ஹேஸ்டிங்ஸ், வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள வருடாந்திர கூட்டத்துடன் தனது பதவியிலிருந்து விலகுகிறார்.

(i) இதன்மூலம், நிறுவனத்துடனான அவரின் 29 ஆண்டுகால பயணம் முடிவுக்கு வருகிறது. 1999-ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் சிஇஓ- ஆக பொறுப்பேற்று. 'பிளாக்பஸ்டர்' போன்ற நிறுவனங்களுடன் போட்டியிட்டு, நெட்ஃபிளிக்ஸை ஒரு டிவிடி விநியோக நிறுவனத்திலிருந்து, உலகளாவிய ஓடிடி ஜாம்பவானாக மாற்றியபெருமை இவரைச் சாரும்.

(ii) கடந்த 2023- ஆம் ஆண்டு, ஜனவரியிலேயே சிஇஓ பொறுப்பிலிருந்து விலகி, டெட் சரண்டோஸ், கிரெக் பீட்டர்ஸ் ஆகியோரிடம் பொறுப்புகளை ரீட் ஹேஸ்டிங்ஸ் ஒப்படைத்திருந்தார். தற்போது இயக்குநர்கள் குழுவிலிருந்தும் அவர் வெளியேறுகிறார்.

6. இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முன்னாள் தலைவர் என். ராமச்சந்திரன் (77), உடல் நலக்குறைவால் சென்னையில் வியாழக்கிழமை (ஏப்.16) காலமானார்.

7. சாலை மார்க்கமாக எரிவாயு கொண்டு செல்வதை குறைக்கவும், எரிசக்தி பாதுகாப்பை மேலும் அதிகரிக்கவும், ரூ.12,500 கோடியில் குழாய்வழி எரிவாயு வழித்தடத்தை அமைக்க மத்திய அரசு திட்டம் வகுத்துள்ளது.

(i) தற்போது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் எரிவாயு, டேங்கர் லாரிகளில் சாலை மார்க்கமாக எடுத்து செல்லப்பட்டு, சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. பிறகு அது சுத்திகரிக்கப்பட்டதும் சிலிண்டரில் நிரப்பப்பட்டு வீடுகளுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது.

(ii) இதனால் எரிவாயு கொண்டு செல்ல சாலை மார்க்க போக்குவரத்தையே எண்ணெய் நிறுவனங்கள் அதிகம் சார்ந்துள்ளன. இந்த சார்ந்திருக்கும் நிலையை குறைக்கும் நோக்கில், குழாய் வழித்தடத்தை ஏற்படுத்த பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையம் திட்டம் வகுத்துள்ளது.

(iii) இதன்கீழ், எரிவாயு இறக்குமதி செய்யப்படும் முனையங்கள், எரிவாயு சுத்திகரிப்பு நிலையங்கள், சிலிண்டரில் எரிவாயு நிரப்பப்படும் இடங்கள் இடையே குழாய்கள் அமைக்கப்படவுள்ளது. இந்த குழாய் வழித்தடம் வழியே அந்த 3 இடங்களுக்கும் எரிவாயு கொண்டு செல்லப்படும்.

(iv) இதனால் சாலை மார்க்கமாக டேங்கர் லாரிகளில் எரிவாயு எடுத்து செல்வது வெகுவாக குறையும். மேலும் எரிவாயு பாதுகாப்பும் மேலும் வலுப்படும்.

(v) இந்தத் திட்டத்தின் முதல்கட்டமாக, குழாய் வழித்தடம் அமைக்க 9 இடங்களை பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையம் அடையாளம் கண்டுள்ளது. அதில் 2,500 கிலோ மீட்டர் தூரத்துக்கு 4 முக்கிய முகம் இடங்களில் குழாய் வழித்தடம் அமைப்பது தொடர்பான ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்யும் பணிகள் நடைபெறுகிறது.

(vi) இதை செயல்படுத்த ரூ.12,500 கோடி ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதால் 2030–ஆம் ஆண்டுக்குள் சாலை மார்க்க எரிவாயு போக்குவரத்தை வெகுவாக குறைக்க முடியும் எனவும், டேங்கர் லாரிகளால் ஏற்படும் வெடிவிபத்துகளும் குறையும் எனவும் நம்பப்படுகிறது.

8. கடந்த 2025–26–ஆம் நிதியாண்டில் 55,200–க்கும் மேற்பட்ட புத்தாக்க நிறுவனங்களுக்கு மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(i) கடந்த 2016 ஜனவரில் 'ஸ்டார்ட்அப் இந்தியா' திட்டம் தொடங்கப்பட்ட பிறகு, இந்த ஆண்டில்தான் மிக அதிக எண்ணிக்கையில் புத்தாக்க நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

- கடந்த மார்ச் 31–ஆம் தேதி வரை 2.23 லட்சத்துக்கு மேல் புத்தாக்க நிறுவனங்களுக்கு

அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் 23.36 லட்சத்துக்கு மேல் நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. மத்திய அரசின் இந்த முக்கியத் திட்டத்துக்கு தொடர்ந்து சிறப்பான ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது. முக்கியமாக புத்தாக்க நிறுவனங்கள் பல்வேறு வழிகளில் நிதி ஆதாரத்தை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- பெரும்பாலும் இளைஞர்களால் புதிதான தொழில் சிந்தனையுடன் தொடங்கப்படும் புத்தாக்க நிறுவனங்கள் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் செயல்படக்கூடியதாகும். புத்தாக்க சிந்தனைகளை ஊக்குவிப்பது, தனியார் முதலீட்டை அதிகரிப்பது ஆகியவை இதன் நோக்கமாகும்.
- தகவல் தொழில்நுட்பத் துறையில் 22 சதவீதம், வேளாண்மைத் துறையில் 18 சதவீதம், மருத்துவத் துறையில் 15 சதவீத புத்தாக்க நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

9. மாநிலங்களவை துணைத்தலைவராக, அந்த அவையின் நியமன எம்.பி.ஹரிவன்ஷ் நாராயண் சிங் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

(i) இதன்மூலம் தொடர்ந்து மூன்றாவது முறையாக மாநிலங்களவை துணைத் தலைவராக ஹரிவன்ஷ் தேர்வாகியுள்ளார். நியமன எம்.பி. ஒருவர், மாநிலங்களவை துணைத் தலைவரானது இதுவே முதல் முறையாகும்.

(ii) பிகாரில் இருந்து ஐக்கிய ஜனதா தளம் சார்பில் கடந்த 2014 முதல் மாநிலங்களவை எம்.பி.யாக இருந்த ஹரிவன்ஷ் நாராயண் சிங், கடந்த 2018, 2020 ஆகிய ஆண்டுகளில் இருமுறை மாநிலங்களவை துணைத் தலைவராகத் தேர்வானார்.

(iii) அவரின் எம்.பி. பதவிக் காலம் கடந்த ஏப்.9–ஆம் தேதியுடன் நிறைவடைந்த நிலையில், அவரை மாநிலங்களவை எம்.பி.யாக நியமித்து, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நடவடிக்கை மேற்கொண்டார்.

10. சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) வெளியிட்ட பெரிய பொருளாதார நாடுகளின் தரவரிசையில் 5–ஆவது இடத்திலிருந்து 6–ஆவது இடத்துக்கு இந்தியா சென்றுள்ளது. பிரிட்டன் 6– ஆவது இடத்திலிருந்து 5–ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

(i) அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்தது மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ஜிடிபி) அடிப்படை ஆண்டை 2011–12–இலிருந்து 2022–23–ஆக மாற்றியமைத்தால் இந்தியா ஓரிடம் பின்தங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

(ii) ஜப்பானை பின்னுக்குத் தள்ளி 4–ஆவது இடத்துக்கு முன்னேற முடியும் என மத்திய அரசு எதிர்பார்த்தது.

(iii) ஐஎம்எஃப் தரவின், கடந்த 2024–இல் இந்தியாவின் ஜிடிபி 3.76 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. பிரிட்டனின் ஜிடிபி 3.7 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. கடந்த ஆண்டில் இந்தியாவின் ஜிடிபி மதிப்பு 3.92 டிரில்லியன் அமெரிக்க டாலராக இருந்த நிலையில், பிரிட்டனின் ஜிடிபி 4 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்தது.

(iv) இந்தியா வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக இருந்த போதிலும், கடந்த சில

மாதங்களாக அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவைக் கண்டது.

(v) அமெரிக்க டாலருக்கு நிகரான இந்தியாவின் ரூபாய் மதிப்பு கடந்த 2024–இல் 84.57–இலிருந்து 2025–இல் 88.48–ஆக வீழ்ச்சியடைந்தது. நிகழாண்டில் மேலும் வீழ்ச்சியடைந்து 92.59 செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க டாலருக்கு எதிராக பிரிட்டனின் பவுண்ட் மதிப்பு வலுவடைந்து வருகிறது.

(vi) ஐஎம்எஃப் தரவின் அடிப்படையில், நிகழாண்டில் பணமாற்ற விகிதத்தின் அடிப்படையில் பெரிய பொருளாதார நாடுகளில் இந்தியா 6–ஆவது இடத்தில் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vii) இருப்பினும், அடுத்த ஆண்டில் பிரிட்டனை மட்டுமல்லால் ஜப்பானையும் கடந்து 4–ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநிலை தொடரும் நிலையில், 2031–இல் இந்தியா ஜெர்மனியை பின்னுக்குத் தள்ளி 3–ஆவது இடத்துக்குச் செல்லும்.

11. தமிழகத்தில் 37 மாதிரி சூரிய கிராமங்கள் அமைப்பதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை பசுமை எரிசக்திக் கழகம் தீவிரப்படுத்தியுள்ளது.

(i) வீடுகளில் சூரிய சக்தி மின் பயன்பாட்டை ஊக்குவிக்க 'பிஎம்.சூர்ய கர்முப்த் பிஜிலி யோஜனா' திட்டத்தை மத்திய அரசு 2024–இல் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் வீடுகளில் சூரியசக்தி மின் நிலையங்கள் அமைக்க 1 கிலோவாட்டுக்கு ரூ.30 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

(ii) தவிர இத்திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் மாதிரி சூரிய கிராமங்கள் அமைக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(iii) அதன்படி, கிராமத்தில் சூரிய சக்தி மின் நிலையம் அமைத்து அதன்மூலம் கிடைக்கும் மின்சாரத்தை அங்குள்ள வீடுகள், பஞ்சாயத்து அலுவலகங்கள் உள்ளிட்ட பொது பயன்பாட்டு கட்டடங்களுக்கு சூரியசக்தி மின்சாரம் விநியோகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

(iv) ஒரு சூரியசக்தி கிராமம் அமைக்க மத்திய அரசு ரூ.1 கோடி நிதியுதவி வழங்குகிறது. தமிழகத்தில் சென்னையைத் தவிர்த்து 37 மாவட்டங்களிலும் சூரியசக்தி கிராமம் உருவாக்கும் பணிகளை மின்வாரியத்தின் துணை நிறுவனமான பசுமை எரிசக்திக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

(v) இதற்காக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசிக்கும் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, மாதிரி சூரிய கிராமங்கள் உருவாக்கப்பட உள்ளன.

(vi) இது குறித்து பசுமை எரிசக்திக்கழக அதிகாரி ஒருவர் கூறியதாவது:

- தமிழகம் முழுவதும் 37 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், தனியார் ஒப்பந்த நிறுவனம் வாயிலாக எவ்வளவு மெகாவாட் திறனில் சூரியசக்தி மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும், அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான மின் வழித்தடம் அமைப்பது உள்ளிட்டவை தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இந்தப் பணிகள் முடிவடைந்ததும் மின் நிலையம் அமைக்கப்பட்டு, கிராமங்களில் உள்ள

அனைத்து வீடுகளுக்கும் சூரிய சக்தி மின்சார விநியோகம் செய்யப்படும் என்றார்.

12.2026 ஏப்ரலில் மத்திய அரசு கொண்டு வந்த 131வது அரசியலமைப்பு திருத்த மசோதா (லோக்சபா இடங்களை அதிகரித்தல் மற்றும் மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்துதல்) தோல்வியடைந்ததைப் பற்றிய பகுப்பாய்வு

(i) தந்திரமான "ஏமாற்று நடைமுறை" மற்றும் அரசியல் நோக்கங்கள்

- அரசியலமைப்பு திருத்த மசோதா நிறைவேற இரு–மூன்றாம் பங்கு பெரும்பான்மை அவசியம் என்பதை அறிந்திருந்தபோதிலும், அரசு இந்த மசோதாவை அறிமுகப்படுத்தியது.
- 528 உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிலையில், 298 பேர் ஆதரவு தெரிவித்தனர்; 230 பேர் எதிர்ப்பு தெரிவித்தனர்.
- மசோதா நிறைவேற 352 வாக்குகள் (இரு–மூன்றாம் பங்கு) தேவைப்பட்டது. அதனால், இது 54 வாக்குகள் குறைவால் தோல்வியடைந்தது.

(ii) வரலாற்று உண்மைகள்: மகளிர் பிரதிநிதித்துவம்

- அரசியலமைப்பு சபை (1946): 1946 டிசம்பர் 9 அன்று முதல் கூட்டம் நடைபெற்றபோது, வெறும் 15 பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தனர்.
- ஆரம்ப கோரிக்கைகள்: அம்மு சுவாமிநாதன், தட்சாயணி வேலாயுதன், சரோஜினி நாயுடு, விஜயலட்சுமி பண்டிட் போன்ற முன்னோடிகள் சட்டமன்றங்களில் சமமான பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தினர்.
- இடஒதுக்கீட்டுக்கு எதிரான கருத்துகள்: ஹன்சா மேத்தா, ரேணுகா ராய் போன்ற சில பெண்கள் ஆரம்பத்தில் இடஒதுக்கீட்டை எதிர்த்தனர். பெண்கள் சலுகைகள் அல்ல, சமூக மற்றும் அரசியல் நீதி வேண்டும்; இடஒதுக்கீடு அவர்களின் திறனை அவமதிப்பதாகும் என்றனர்.
- 1951 நிலைமை: முதல் லோக்சபா தேர்தலில் (1951), 489 இடங்களில் வெறும் 22 பெண்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர் (4.5%).

(iii) மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாக்களின் வளர்ச்சி

- ராஜீவ் காந்தி தலைமையிலான அரசு, உள்ளாட்சி அமைப்புகளில் 33% இடஒதுக்கீட்டை லோக்சபாவில் நிறைவேற்றியது; ஆனால் அது மாநிலங்களவையில் தோல்வியடைந்தது.
- 1992 வெற்றி: பி.வி. நரசிம்ம ராவ் அரசு, கிராம பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளில் 33% மகளிர் இடஒதுக்கீட்டை இரு அவைகளிலும் நிறைவேற்றியது.
- 1996 முயற்சி: தேவேகவுடா அரசு, பாராளுமன்றத்தில் 33% இடஒதுக்கீடு வழங்க 8வது அரசியலமைப்பு திருத்த மசோதாவை அறிமுகப்படுத்தியது; ஆனால் அது நிறைவேறவில்லை.
- 2010 நிலை: மன்மோகன் சிங் அரசு கொண்டு வந்த 108வது திருத்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேறினாலும், லோக்சபாவில் எடுத்துக்கொள்ளப்படாமல் காலாவதியானது.
- 2023 முக்கிய கட்டம்: நரேந்திர மோடி அரசு 106வது திருத்தத்தை (நாரி சக்தி வந்தன்

அதினியம்) நிறைவேற்றியது; ஆனால் அதன் அமலாக்கம் எதிர்கால தொகுதி மறுசீரமைப்புடன் இணைக்கப்பட்டதால் 2034 வரை தாமதமானது.

- 2026 மோதல்: 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் லோக்சபா இடங்களை 850 ஆக அதிகரித்து, தாமதத்தை தவிர்க்க இந்த மசோதா முயன்றது; இதுவே தற்போதைய அரசியல் மோதலுக்குக் காரணமாகியுள்ளது.

(iv) விளைவுகளின் பகுப்பாய்வு

- 543 இடங்களில் இருந்து 850 இடங்களுக்கு மாற்றம் எவ்வாறு நடைமுறையில் அமல்படுத்தப்படும், மேலும் இத்தனை உறுப்பினர்களுக்கான விவாத நேரம் எவ்வாறு ஒதுக்கப்படும் என்பதில் அரசு தெளிவாக விளக்கம் அளிக்கவில்லை.
- பிராந்திய சமநிலையின்மை: மக்கள் தொகை அடிப்படையில் இடங்களை நிர்ணயிப்பது, குடும்ப கட்டுப்பாட்டில் வெற்றி பெற்ற தென்னிந்திய மாநிலங்களுக்கு "தண்டனை" போல் அமையும் என்ற அச்சம் உள்ளது; இது அவர்களின் லோக்சபா செல்வாக்கை குறைக்கக்கூடும்.
- 2029 குறித்து நிச்சயமின்மை: 2026 மசோதா தோல்வியடைந்ததால், 33% மகளிர் இடஒதுக்கீட்டின் அமலாக்கம் இன்னும் "மாயை" போலவே உள்ளது; 2029 பொதுத் தேர்தலுக்கான முக்கிய தீர்க்கப்படாத பிரச்சினையாக இது நீடிக்கிறது.